கும்பகோணம் நகராட்சி 150வது ஆண்டு

2014ம் ஆண்டின் சிறந்த நகராட்சி – முதல் பரிசு

# கும்பகோணம் நகர்மன்றம்

## சாதாரணக் கூட்டம்

## நாள் : 26.08.2021

## 26.08.2021ம் தேதிய நகர்மன்ற சாதாரண கூட்ட பொருள்கள்

**01)** கும்பகோணம் நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவு பொதுக்கழிவறைகளை சுத்தம் செய்து கிருமி நாசினி தெளிக்கும் பணிக்கு நகர்மன்ற தீர்மானத்தின் அடிப்படையில் நகராட்சி ஆணையர், இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ந.க.எண் 10347/2019/எச்1, நாள் 04.11.2019ஆம் தேதிய உத்தரவில் பணிக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டு 19.11.2019 முதல் ஓராண்டுக்கு திருமதி.எஸ்.கலைச்செல்வி, விஜயலட்சுமி டிரேடர்ஸ், கும்பகோணம் நிறுவனத்தின் மூலம் பணிகள் நடைபெற்றுவந்த நிலையில், பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ந.க.எண் 10347/2019/எச்1, நாள் 04.11.2019ஆம் தேதிய உத்தரவின்படி நிபந்தனைகளுக்குட்பட்டு அதே விலை விகிதத்தில் பணிகளை 20.10.2020 முதல் ஓராண்டுக்கு பணிகள் மேற்கொள்ள மேற்படி நிறுவனத்தாருக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சி ஆணையர் அவர்களின் 04.08.2021–ஆம் தேதிய ஆய்வு குறிப்பில், திருமதி.எஸ்.கலைச்செல்வி, விஜயலட்சுமி டிரேடர்ஸ், கும்பகோணம் நிறுவனத்தாரால் பராமரிக்கப்பட்டுவருவதாக பட்டியல்களில் தெரிவிக்கப்பட்டுள்ள பாரதியார் தெரு, பழைய ஏ.ஆர்.ஆர் காலனி, வீரபத்திர சந்து, செம்போடை தெரு, சிங்கார தோப்பு, பிரம்மன் கோவில் ரெங்கன் தெரு, அய்யனார் கோவில் தெரு மற்றும் பொற்றாமறை குளக்கரை ஆகிய கழிவறைகளில் மேற்படி நிறுவனத்தாரால் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை என்பது தெரியவருவதோடு, மேற்குறிப்பிட்ட கழிவறைகள் அனைத்தும் சுய உதவிக் குழுக்களை சேர்ந்த தனிநபர்களால் தூய்மை செய்து பராமரிக்கப்பட்டுவருகிறது.

எனவே பணி ஆணை நிபந்தனைகளின்படி திருமதி.எஸ்.கலைச்செல்வி, விஜயலட்சுமி டிரேடர்ஸ், கும்பகோணம் நிறுவனத்தின் ஒப்பந்தத்தை 16.08.2021–ஆம் தேதியுடன் ரத்து செய்ய மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** எவ்வித பணியும் முறைப்படி மேற்கொள்ளப்படாமலும், பணி நிபந்தனைகளை முறைப்படி பின்பற்றாமல் செயல்பட்டுவருவது மற்றும் நிர்வாக காரணங்களால் திருமதி.எஸ்.கலைச்செல்வி, விஜயலட்சுமி டிரேடர்ஸ், கும்பகோணம் நிறுவனத்தின் பணிக்காலத்தினை 16.08.2021–ஆம் தேதியுடன் ரத்துசெய்ததை அங்கீகரிக்கலாம்.

**ந.க. எண்.10347/2019/எச்.1**

---

**02)** இந்நகராட்சிக்குட்பட்ட கும்பேஸ்வரன் தெற்கு வீதி அம்மா உணவகத்திற்கு குளிர் சாதன பெட்டி,மிக்ஸி,அலுமினிய வாளி,சில்வர் குவளை, அண்ணக்கூடைகள் ஆகியவை சப்ளை செய்யும் பணிக்கு 07.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் முடிவிற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|
| 1 | M/s.Rajarethinam Builders, Kumbakonam. | 70000/– |
| 2 | Thiru.J.Sampath,Contractor, Kumbakonam | 71131/– |

**அலுவலக குறிப்பு** 1)மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2)வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாககொடுத்துள்ளM/s.Rajarethinam Builders,Kumbakonam.நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

3) மன்ற அனுமதியினை எதிர்நோக்கி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண் 47212020/ /E2**

**03)** நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.2867/2021/டிசிபி2, நாள்.30.07.2021 தேதி கடிதத்தில் கும்பகோணம் நகராட்சி பகுதி வார்டு எண் 06, பிளாக் எண் .40, சர்வே எண்.2049/2ஏ2–ல் அமைந்துள்ள 3302.86 ச.மீ பரப்பளவிலான இடத்தில் தரை கீழ் தளம், தரைதளம், மெஸனின் தளம் மற்றும் மூன்று தளங்களுடன் கூடிய உணவகம் மற்றும் தங்கும் விடுதி கட்டுமானம் கட்டட அனுமதி தொடர்பாக நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் செயலானை கடிதத்தில் சிறப்பு நிபந்தனைகள் வ.எண்.07–ல் குறிப்பிடப்பட்டுள்ள விபரமான ஒப்பிட்ட Site Plan–ல் A to D என எல்லையிடப்பட்டுள்ள ‘C-C 80’0’’ அகல திட்ட சாலை பகுதி பரப்பான 133.68 ச.மீ இடத்தினை தானமாக பெற மன்றத்தின் ஒப்புதலுக்கு, தானபத்திரம் பதிவுக்கும் மன்றத்தின் அனுமதிக்கும்.

**அலுவலக குறிப்பு :**

1. A to D என எல்லை.டப்பட்டுள்ள திட்ட சாலை வரைபடத்தின் அனுமதிக்கலாம்.
2. திட்ட சாலை பகுதி பரப்பினை 133.68 ச.மீ இடத்தினை தானமாக பெற்றுக்கொள்ளலாம்.

**ந.க.எண்.7173/2021/D1**

---

**04)** தன்னிறைவுத் திட்டம் 2020-21ன்கீழ் , வார்டு எண்.1, ே□லக்கொட்டையூர் குளத்தின் கி□க்கு பகுதியில் தடுப்புச் சுவர் அமை□த்தல் ப□ ிக்கு இ–டெண்டரிங் முறையில் 9.6.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரும் இவ்வலுவலக ந.க.எண்.4438/2021/இ2 நாள் 18.5.2021 ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கையினை தஞ்□ாவூர், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் அவர்களின் வெளியீட்டு ஆணை எண்.135/செ□.□.தொ.அ./தஞ்□ாவூர்-ன்படி தின□ □ ி நாளித□ில் 20.5.2021-ல் அன்று விளம்பரம் செய்தமைக்கும், அதற்கான செலவினம் ரூ.4183/–க்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**<u>அலுவலக குறிப்பு:</u>** 1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க. எண்.** 4438/2021/இ2

---

**05)** இந்நகராட்சிக்குச் சொந்தமான அறிஞர் அண்ணா புதிய பேருந்து நிலைய நுழைவு வாயிலின் 50 தற்காலிகமாக அமைத்துக் கொண்ட கடைகள் தீர்மான எண்.322, நாள்.25.10.2013ன் படி நாள் ஒன்றுக்கு, கடைகள் வைக்கும் நபர்களிடம் ரூ.100/– தினசரி கட்டணம் நகராட்சி பணியாளர்களை கொண்டு வசூல் செய்ய தீர்மானிக்கப்பட்டது. அதன்படி நகராட்சி பணியாளர்களால் வசூல் செய்யப்பட்டு வருகிறது. மேலும் காவல் ஆய்வாளர், மேற்கு காவல் நிலையம், நகரப் பேருந்து நிலையத்திற்குள், போக்குவரத்திற்கும், பொது மக்களுக்கும் இடையூறாகும் ஒருவருகொருவர் போட்டி மனப்பான்மையுடன் செயல்பட்டு சமீபகாலமாக, அவர்களுக்குள் ஏற்பட்ட விரோத போக்கினால் அடிக்கடி, சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படுவதாக தெரிவித்துள்ளார். எனவே, பொதுமக்கள் நலன் கருதியும் போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமலும், பேருந்து நிலையத்தில் அபிவிருத்தி பணிகளாக கழிவுநீர் ஒடை, சுத்தம் செய்யவும் மழைக்காலங்களில் பேருந்து நிலையத்தில் அதிகமான மழைநீர் தேங்கி, வெளியில் செல்ல வழிவகை இல்லாத காரணத்தினாலும் பேருந்து நிலையத்தில் கீழ்புறம் அமைந்துள்ள தற்காலிக கடைகளை இடித்து அப்புறப்படுத்திவிட்டு நவீனமயமாக்க நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.9699/2010/அ7

---

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்**
**கும்பகோணம் நகர்மன்றம்**